

பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 76

01.09.2026

லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அதிகாரி கைது

புகார்தாரர் திரு.ராமசாமி, தன்னுடைய விவசாய நிலத்தை உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றி வழங்க வீரசோழபுரம் கிராம நிர்வாக அலுவலகம், திருப்பூர் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.அருண்குமார், கிராம நிர்வாக அதிகாரி, வீரசோழபுரம்,, வெள்ளகோவில் பிர்கா, காங்கேயம் தாலுகா, திருப்பூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.40,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். கடந்த 26.08.2026 அன்று முன்பணமாக ரூ.10,000/- பெற்றுக்கொண்டார். மேற்கொண்டு லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருப்பூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 01.09.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.அருண்குமார். கிராம நிர்வாக அதிகாரி அவர்கள் ரூ. 20,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 76
01.09.2026

VILLAGE ADMINISTRATIVE OFFICER, ARRESTED FOR BRIBE

The complainant Tr.Ramasamy, had applied for sub division of agricultural land and patta name transfer at Village Administrative Office, Veeracholapuram, Vellakoil Firka, Kangayam Taluk, Tiruppur District. Tr.Arunkumar, Village Administrative Officer, Veeracholapuram, Vellakoil Firka, Kangayam Taluk, Tiruppur District demanded Rs. 40,000 as bribe for processing his application. On 26.08.2026 Tr.Arunkumar, received bribe of Rs.10,000-/ as advance from the complainant. Unwilling to give further bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tiruppur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (01.09.2026). During trap proceedings, Tr.Arunkumar, Village Administrative Officer, received the bribe amount of Rs.20,000/- from the complainant. The accused was arrested and remanded.